1992 மார்ச் 17]

கக்கூடிய நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 500 குடும்பங்களுக்கு மேற் கொண்டு, 120 குழந்தைகள் உள்ள போளூர் ஒன்றியத்தில் உள்ள காங்கேயலூர் ஊராட்சியில் உள்ள சோழங்குப்பம் என்ற கிராமத்திலேயும், திண்டிவனம் ஊராட்சியில் கணேசபுரம் என்ற கிராமத்திலேயும் புரட்சித் தலைவருடைய புகழை நிலை நிறுத் தும் வண்ணம் சத்துணவு மையங்கள் ஏற்படுத்த அரசு முன் வருமா ? அப்படிக் கூடிய விரைவில் அதனை அமைத்து, நல்ல முறையில் இந்த ஏழை எளிய குழந்தைகளுக்கு உணவு வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப் பினர் குறிப்பிடும் திண்டிவனம் ஊராட்சியில் அத்திமூர் கிராமத் தில் ஒரு மையம் 80 குழந்தைகளுடன் இயங்கி வருகிறது. போளூர் வட்டாரத்தில், காங்கேயலூர் கிராமத்தில் ஒரு மையம் 55 குழந்தைகளுடன் இயங்கி வருகிறது. ஒரு குழந்தைகள் நல மையம் துவங்குவது என்றால், குறைந்த பட்சம் 70 குழந்தைகள் இருக்க வேண்டும். இதற்குக் குறைந்தபட்சம் ரூபாய் 15,000 ஆண்டுக்கு செலவு ஆகிறது. உலக வங்கி உதவியுடன் ஊட்டச்சத்து திட்டம்—2 இந்த மாவட்டத்தில் 1993இல் அமல்படுத்தப்படும்பொழுது புதிய மையங்கள் முழுவதும் அந்த மாவட்டத்தில் துவக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : வினா எண் 258. திரு. எம்.எம். எஸ். அபுல்ஹசன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

258—

<u>தமிழகத்திலுள்ள மசூதிகளைச் சீரமைக்க நன்கொடை வசூல்.</u>

<u>* 5727 திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் :</u>

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து மசூதிகள், தர்காக்கள் மற்றும் மையத்து கொல்லைகள் ஆகியவைகளை சீரமைக்கும் பொருட்டு பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் பெறும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வசூல் செய்யப்படும் ?

(இ) மசூதிகள் எப்போது சீரமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ): இக் கேள்விகளுக்கு இடமில்லை.

மூற்பகல் 10-40

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வக்ஃப் வாரியத்தில் இணைக்கப்பட்ட பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் இறந்தவர்களை அடக்கம் செய்யக்கூடிய இடங்களான கபர்ஸ்தானங்கள் மொத்தத்தில் சுமார் 6,100 இருக்கின்றன. அரசு, இவைகளைப் புதுப்பிப்பதற்கு வருடத்திற்கு ரூ. 3 லட்சம் அளிக்கிறது. இந்தத் தொகை போதாது. இதனை வருடத்திற்கு ரூ. 6 லட்சமாக உயர்த்திக் கொடுப்பதற்கு இந்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, நமது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மேலான பார்வைக்கு வைக்கப்பட்டு, பரிசீலிக்கப் படும்.

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எவ்வளவோ பள்ளிவாசல்கள் தனியார்களால் நல்ல எண்ணத்தோடு கட்டப்பட்டு வருகின்றன. இதனை, வக்ஃப் வாரியம், இன்றையதினம் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, பள்ளிவாசல்களைக் கட்டும் நல்ல எண்ணம் கொண்டவர்கள்மீது வழக்குத் தொடர்வதற்கு உத்தரவினை வழங்கி, அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து, பள்ளிவாசல் கட்டும் எண்ணம் கொண்டவர்களின் மனதைப் புண்படுத்தி வருகிறது. அப்படி இல்லாமல், அந்த ஜனாஸ்தார்களை அழைத்து வக்ஃப் வாரியம் கேட்டிருக்கலாம்; அப்படி இல்லாமல் அவர்கள்மீது வேண்டுமென்றே வழக்குத் தொடர்கிறார்கள். இதனை இந்த அரசு அறியுமா? ஆம் எனில் இப்படி வேண்டுமென்றே வழக்குப் போடுவதற்குக் கொடுத்த உத்தரவினைத் திரும்பப் பெறுவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள இதுபோன்ற பள்ளிவாசல்களைப் பற்றி, மாண்புமிகு உறுப்பினர், அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், இதுபற்றி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

1992 மார்ச் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

(அ) பரமக்குடியில் மின் அழுத்தக் குறைவால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பரமக்குடி தொகுதியில் மின் அழுத்தம் குறைவாக இருப்பது குறித்து'' மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

விவர அறிக்கை.

(1) பரமக்குடி நகரப் பகுதியில் உள்ள குழல் விளக்குகள் யாவும் சரிவர எரிகின்றன.

(2) ஆனால் பரமக்குடியின் ஊரகப்பகுதிகளிலுள்ள தெரு விளக்குகள் மின் மாற்றியிலிருந்து வெகு தொலைவில் உள்ளதால் மாலை வேளைகளில் இக் குழல் விளக்குகள் சரிவர எரிவதில்லை. இப் பகுதிகளில் மின் வினியோக நிலைமையைச் சீர் செய்ய கீழ்க்கண்ட பணிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டு விட்டன.